**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் மேட்டூர்**

**C.C.No. 135/2014** **நாள்: 25.11.2022**

**ம.சா.1 வீரராஜ், த/பெ. அப்பு**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் பழைய எண். 452/7 புதிய சர்வே எண்.546/6. இந்த சொத்தின் விஸ்தீரணம் 99 செண்ட் என்றால் சரிதான். இந்த சொத்தை கூட்டுக்குடும்ப சொத்து என புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். இந்த கூட்டுக்குடும்ப சொத்திற்கு யார் வாரிசு என்றால் நடேசன், வெங்கடாஜலம், அப்பு, கோசலை மற்றும் இவர்களின் குடும்பத்தினர். நடேசன் மற்றும் வெங்கடாஜலம் ஆகியோர் மீது இந்த தனி புகார் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் சார்பாக நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன். நடேசன் மற்றும் வெங்கடாஜலம் ஆகியோர் எனக்கு இந்த வழக்கை நடத்துவதற்கு எழுத்துபூர்வமான உத்தரவு கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை.

2) நடேசன் மற்றும் வெங்கடாஜலம் சார்பாக இந்த தனிப்புகாரை தாக்கல் செய்வதாக புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் அவர்கள் யாரும் எனக்கு வழக்கை நடத்துவதற்கு அனுமதி அளிக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா பெயரில் சர்வே எண். 452/14, 452/16, 544/10, 546/2 ஆகிய புல எண்களில் சொத்துக்கள் இருந்ததா என்றால் 544/10யில் மட்டும் சொத்து இருந்தது. சர்வே எண். 555/2A, 555/2B, 555/2C ஆரம்ப காலகட்டத்தில் யார் பெயரில் இருந்தது என்றால் என் பெரியப்பா மாதன் பெயரில் இருந்தது. மாதனுக்கு திருமணமாகிவிட்டதா என்றால் இல்லை. மாதன் என் அப்பாவின் சகோதரர். மாதன் என்பவர் திருமணமாகாமல் இறந்துவிட்டதால் மாதனுக்கு கோசலையும் வாரிசுதாரர்

என்றால் இல்லை. மாதன் பெயரில் இருந்தபட்டாவை 555/2A வெங்கடாஜலம் பெயருக்கும், 555/2B நடேசன் வாரிசு பாப்பாத்தி, மணிமேகலை பெயருக்கும், 555/2C என் அப்பா அப்பு பெயருக்கும் மாற்றப்பட்டது என்றால் தெரியாது.

3) எந்த புல எண்ணில் உயில் திருத்தம் செய்துகொண்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண். 546/6. சர்வே எண். 544/10 வெங்கடாஜலம், அமராவதி பெயரில் இருந்து அதனை 1986ம் வருடம் மாரியப்பன் என்பவருக்கு விற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் பாட்டி அமராவதியை யார் பராமரித்து வந்தனர் என்றால் நான்தான் பராமரித்தேன். நான் சொல்வது பொய் என்றும் 1வது எதிரி கோசலைதான் எனது பாட்டியை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. கோசலை அமராவதியை பராமரித்ததால்தான் கோசலை பெயருக்கு ஒரு வீடும், 1 ஏக்கர் 38 செண்ட் உயில் எழுதி வைத்தார்கள் என்றால் சரியல்ல. நான்தான் அமராவதியை பராமரித்து வந்தேன். அமராவதிக்கு வயதாகி உடல்நிலை சரியில்லாத காரணத்தால் கோசலை தான் பராமரிப்பதாக அமராவதியை அழைத்து சென்று வற்புறுத்தி அமராவதியிடம் உயில் எழுதி வாங்கிவிட்டார்கள். அமராவதிக்கு கண் பார்வை இல்லை என்றால் முதலில் தெரியும் வயதாகிவிட்டதால் கடைசியாக அவருக்கு கண்பார்வை தெரியாது.

4) கண்பார்வை தெரியாத காரணத்தினால் நான் அமராவதியை பராமரிக்கவில்லை என்றும் அவரது சொத்துக்களை வாங்கிகொண்டு பராமரிக்காததால் கோசலை அமராவதியை பராமரித்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் கோசலை வற்புறுத்தி அழைத்து கொண்டு போகவில்லை என்றும் நான் பராமரிக்காததால்தான் தாய் என்ற காரணத்தினால் அமராவதிகை கோசலை அழைத்துக்கொண்டு பராமரித்தார்

என்றால் சரியல்ல. அமராவதியை அழைத்து செல்ல கோசலை அன்றுமட்டுமே கொளத்தூர் வந்தார் அதற்கு முன்பு வரவில்லை. என் பெரியப்பா மாதன் என்பவர் பெயரில் சர்வே எண்.367/A, 367/B இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட புல எண்களில் உள்ள சொத்து விவரம் எனக்கும் தெரியாது என் குடும்பத்தாருக்கும் தெரியாது. என் பெரியப்பா மாதன் எந்த வருடம் இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு என்ன வயதாகிறது என்றால் 38 வயதாகிறது.

5) உயில் மாற்றி எழுதியது தெரிய வந்த பின்னிட்டு காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. போர்ஜரி செய்து கையெழுத்தை ஏமாற்றிய குற்றத்திற்கு முதலில் காவல்நிலையத்தில் புகார் செய்துவிட்டு காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்தான் நீதிமன்றத்தில் புகார் அளித்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. உரிய வழிமுறையை பின்பற்றி நான் புகார் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6) உயில் திருத்தியது சம்மந்தமாக மேற்படி பத்திரம் எழுதியவர், சார்பதிவாளர் ஆகியோரை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவேண்டிய அவசியமில்லை. திருத்தியது எதிரிகள்தான். மூலபத்திரத்தை பார்த்து தற்போதுதான் சொத்துக்களை விற்பனை செய்யும்போது பார்க்கிறார்கள் அப்போது அப்படியில்லை. உயிலில் புல எண்கள் மாறுபட்டு இருந்தாலும், சக்குபந்தி விவரங்கள் மற்றும் புல எண், விஸ்தீரணம் குறித்து எந்த மாறுதலும் இல்லை என கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் புல தணிக்கை செய்து வட்டாட்சியர் அறிக்கை தாக்கல் செய்த பின்னிட்டு கோசலை பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது பாட்டி அமராவதி கோசலைக்கு உயில் எழுதி வைத்தார்

என்றும் அதைதான் கோசலை விற்றார் என்றும் என்னுடைய சொத்தை அவர் விற்கவில்லை என்றால் சரியல்ல. எனது பெரியப்பா மாதன் என்பவருக்கு கோசலையும் வாரிசு என்றும், நான் மோசடியாக அவர் பெயரில் உள்ள சொத்துக்களை என் பெயருக்கு மாற்றம் செய்துள்ளதால் நானும் மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) கோசலை, என் அப்பா அப்பு, வெங்கடாஜலம், நடேசன் ஆகியோர் பெயரில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் காவல்நிலையத்தில் புகார் அளிக்காமல் வழக்கு தாக்கல் செய்ததாலும், உரிய தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் போர்ஜரி செய்யவில்லை என்றும், என் தகப்பானார் தான் 5 முதல் 7 எதிரிகளுக்கு தாவா சொத்தை 1 லட்ச ரூபாயை கமிஷனாக வாங்கிகொண்டு விற்றார் என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ளது போல் 1 முதல் 4 எதிரிகள் யாரும் உயிலை மாற்றவில்லை என்றும் போர்ஜரி செய்யவில்லை என்றும் மசொன்னால் சரியல்ல. 1 முதல் 4 வரையான எதிரிகள் யாரும் போர்ஜரி செயலில் ஈடுபடவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 4 வரையிலான எதிரிகள் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டது.**

**5 முதல் 7 வரையிலான எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டுர்.**